*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# Grammatical Structure of Tinai (Classification) and Paal (Gender) as Shown in Tamil and Kannada Grammar Books: A Comparative Perspective

**R. Brindha[1], Dr. P. Kumar[2]**
[1]Ph.D. Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur – 610 005. Email: brindharavisankar@gmail.com
[2]Research Guide, Assistant Professor, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur – 610 005. Email: dr.pkumar@cutn.ac.in

**Abstract:**

Language is a tool used by living beings to express their thoughts. Grammar books demonstrate how language is spoken at various levels, undergoes changes, and provides a systematic structure for these linguistic elements. Such grammatical treatises have emerged in both Tamil and Kannada throughout the ages. This article examines the structure of Tinai (class/category) and Paal (gender/number) in these two languages, based on the first available grammatical works for phonology and morphology. This study investigates the systems of Tinai and Paal by taking Tolkappiyam, the most ancient grammatical work in Tamil, and Karnataka Bhashabhushanam, a work that defines the grammar for letters and words in Kannada, as its primary basis.

**Keywords** : *Tamil, Kannada, Grammar, Comparative Study, Tinai, Paal, Gender Structure, Tolkappiyam, Karnataka Bhashabhushanam, Linguistics, Morphology.*

## References:

1. Rice, Lewis. Nagavarma's Karnataka Bhasha-bhushana. Gyan Publishing House, 2020.
2. Ilavararsu, Soma. Nannūl. Manivasagar Pathippagam, 2014.
3. Cēṉāvaraiyar. Tolkāppiyam Collatikāram: Cēṉāvaraiyar Urai. The South India Saiva Siddhanta Works Publishing Society, 2019.
4. Maniyan, Thanga. Tirāviṭa Moḻikaḷiṉ Oppīṭṭāyvu [A Comparative Study of Dravidian Languages]. Kavitha Art Printers, 2004.
5. John Samuel, G. Tirāviṭa Moḻikaḷiṉ Oppāyvu [A Comparative Study of Dravidian Languages]. Institute of Asian Studies, n.d.

**Author Contribution Statement**: NIL.

**Author Acknowledgement**: NIL.

**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# ஒப்பீட்டு நோக்கில் தமிழ் – கன்னட இலக்கண நூல்கள் காட்டும் திணை - பால் இலக்கண அமைப்பு

[1]**ர. பிருந்தா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் – 610 005
[2]**முனைவர் ப. குமார்,** நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் – 610 005

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

மொழி என்பது உயிர்கள் தான் நினைப்பவற்றை வெளியில் கூறுவதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவியாகும். மொழியானது பல்வேறு நிலைகளில் பேசப்பட்டு மாற்றத்திற்குள்ளாவதைக் காட்டுவதும், அவற்றினை மொழியமைப்பில் சீர்படுத்தியும் கூறுவது இலக்கண நூல்களாகும். அவ்வாறு இலக்கண நூல்கள் தமிழ் மற்றும் கன்னட மொழிகளில் காலந்தோரும் உருவாகி வந்துள்ளன. அவ்வாறு இவ்விரு மொழிகளிலும் எழுத்து, சொல்லிலக்கணங்களுக்கு வந்துள்ள முதல் இலக்கண நூல்களைக் கொண்டு இரு மொழிகளிலும் திணை மற்றும் பால் அமைப்புகள் எவ்வாறு உள்ளன என்பதைக் காணுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. தமிழ் மொழியில் காலத்தால் முற்பட்ட பழமிலக்கண நூலானத் தொல்காப்பியத்தையும், கன்னட மொழியில் எழுத்து சொல்லிற்கு இலக்கணம் கூறும் கர்நாடக பாஷாபூஷணம் என்னும் நூலையும் அடிப்படையாகக் கொண்டு திணை, பால் இவற்றின் அமைப்புகள் குறித்து இக்கட்டுரை ஆராய உள்ளது.

**சொல் என்பதன் இலக்கணம்:**

சொல் என்பது, ஒரு எழுத்தோ அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துக்களோ தொடர்ந்து வந்து பொருளைத் தருவது சொல்லாகும். இச்சொற்கள் என்பவை பொருளைக் கொடுக்க வேண்டும். பொருளைக் கொடுப்பதையே சொல் என்கின்றது தொல்காப்பியம். இதனைத் தொல்காப்பியம்,

“எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே” (தொல். சொல். 155., 2019, ப.147) என இவ்வாறு கூறுகிறது.

இங்கு எல்லாச் சொல்லும் என்பது பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியச் சொற்களாகும். இச்சொற்கள் அனைத்தும் பொருளைக் குறிப்பனவே என்கிறார். மேலும், சொல் என்பது, சொன்மை மற்றும் பொருண்மை ஆகிய இரண்டையும் உணர்த்தி நிற்க வேண்டும். அதுவே சொல்லாகும் என்கின்றார் தொல்காப்பியர். இதனைத் தொல்காப்பியம்,

“பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்
சொல்லி னாகு மென்மனார் புலவர்” (தொல். சொல். 156., 2019, ப.148) என இவ்வாறு கூறுகிறது.

(எ.டு.)

சான்றோர் – பண்புடையோர் என்பது பொருண்மை

KALANJIYAM

சான்றோர் – உயர்திணைப் பலர்பால் என்பது சொன்மை.

இவ்வுதாரணங்களில் இருப்பது போன்று ஒரு சொல் என்பது, சொன்மை மற்றும் பொருண்மை ஆகிய இரண்டையும் குறித்து நிற்க வேண்டும்.

**தமிழ் இலக்கணங்களில் பெயர்ச்சொல்:**

சொற்களில் சிறப்புடையச் சொற்களாக உள்ளதென்பது பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களுமேயாகும். பெயர்ச்சொல் என்பது, உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை ஆகிய மூன்றுத் திணைகளையும் குறிக்கும். முறையே அவைகள், உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுத்திணைப் பெயர்களாகும். இதனைத் தொல்காப்பியம்,

“அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே” (தொல்.சொல். 160., 2019, ப.151) என இவ்வாறு கூறுகிறது.

(எ.டு.)

கண்ணன் – உயர்திணைக்கு உரிமை

மாடு – அஃறிணைக்கு உரிமை

வெள்ளை – ஒருவன் பெயர், ஒருவர் வளர்க்கும் நாயையும் குறிக்கும் – இவ்வாறு வெள்ளை என்பது ஒரு உயர்திணையையும், அஃறிணையும் உணர்த்துவதால் இது விரவுத்திணை ஆயிற்று.

இப்பெயர்ச்சொற்களானவை, இருதிணை ஐம்பால் உணர்த்துதற்கு உரியனவாகும். இருதிணை என்பவை உயர்திணை, அஃறிணை ஆகும். ஐம்பால் என்பவை – இருதிணையில் உள்ள பாலைக் குறிப்பவையாகும். ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியனவாகும். இதனைத் தொல்காப்பியம்,

“இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு
முரியவை யுரிய பெயர்வயி னான” (தொல்.சொல். 161, 2019, ப.151) என இவ்வாறு கூறுகிறது.

பெயர்ச்சொல் என்பவைகள், மொழியில் காலம் காட்டாது, வேற்றுமையை ஏற்று செயல்படுவனவாகும். இதனை நன்னூல், “இப்பெயர்ச்சொற்கள், இடுகுறியும், காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்து வினையாலணையும் பெயர் ஒன்று மட்டும் காலம் காட்ட, அல்லாதன காலம் காட்டாதனவாய் எட்டு வேற்றுமைகளும் சார்வதற்கு இடமாகி இரு திணையிலும், ஐம்பாலிலும், மூவிடத்திலும் ஒன்றை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பவுமாகி வருவன” (நன்.36., 2014) பெயர்கள் ஆகும் என்கிறார் நன்னூலார்.

பெயர்ச்சொல் என்பவைகள், மொழியில் காலம் காட்டாது, வேற்றுமையை ஏற்று செயல்படுவனவாகும். அப்பெயர்ச்சொல் என்பவைகள் மொழியில் பெயர் அடைகளையும்,

முற்றுகளையும், எச்சங்களையும் அதன் வகைகளாகக் கொண்டிருந்தாலும், பெயர் என்பதன் அடிப்படையில் சிலவற்றை ஏற்று நிற்கும் எனத் தொல்காப்பியரும், நன்னூலாரும் கூறுவது போல, அவற்றுள் இருதிணை – பால், எண், இடம், வேற்றுமைகள் ஆகியவற்றைப் பெயர்ச்சொல் என்னும் பகுதி கொண்டிருந்தாலும் இக்கட்டுரைக்குரியத் திணை – பால் இவற்றை மட்டும் இப்பகுதி ஆராய்கிறது.

**தமிழில் திணை - பால்:**

திணை மற்றும் பால் என்பவைகள் பெயர்ச்சொல்லை வெளிப்படையாகக் காட்டி நிற்பவைகளாகும். இவ்வாறு உள்ள திணை மற்றும் பால் என்பவைகள் குறித்து தொல்காப்பியம் கூறுவனவற்றைக் காணலாம். தொல்காப்பியத்தில் திணையானது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவைகளாவன,

1. உயர்திணைப் பெயர்
2. அஃறிணைப் பெயர் என்பவைகளாகும்.

மனிதரைச் சுட்டும் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் எனவும், மனிதரல்லாதப் பிற உயிருள்ள, உயிரற்றப் பொருள் அனைத்தையும் சுட்டும் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொல்காப்பியம்,

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே." (தொல்., சொல்., 1, 2019, ப.9) இவ்வாறு

கூறுகிறது.

**கன்னடத்தில் திணை – பால்:**

கன்னட மொழியில் திணை மற்றும் பால் அமைப்புகள், தமிழ் மொழியில் கூறப்பட்டுள்ளதைப் போன்றே திணை என்பது இரண்டு வகையாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. அது உயர்திணை மற்றும் அஃறிணை என்பவைகளாகும். இத்திணைகளின் ஆண், பெண் பால்களைக் குறிப்பவற்றை உயர்திணைப் பால்கள் என்றும், முறையே அவற்றை, ஆண்பால், பெண்பால் என்றும், ஒன்று மற்றும் பலவற்றைக் கூறிப்பவற்றை அஃறிணைப் பால்கள் என்றும், முறையே, ஒன்றன்பால், பலவின்பால் எனவும் அழைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

"திராவிடப் பெயர்கள் இருவகையாகப் பிரிக்கப்படும். அவற்றிற்கு 'உயர்திணை' 'அஃறிணை' எனப் பெயரிடுவர் தமிழிலக்கண ஆசிரியர்கள். 'மஹாத்' 'அமஹாத்' எனப் பெயரிட்டு அழைப்பர் தெலுங்கு ஆசிரியர்கள். (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்., டிசம்பர் '59., ப.242) எனத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் மொழிபெயர்ப்பு நூலில் கா. கோவிந்தன், தா. சிங்காரவேலு இவ்வாறு கூறுகின்றனர்

**தமிழில் உயர்திணை:**

மக்களைக் குறிக்கும் திணை உயர்திணை எனப்படும். இவ்வுயர்திணையில் ஆணைக் குறிக்கும் சொல், பெண்ணைக் குறிக்கும் சொல், பலரைக் குறிக்கும் சொல் என மூன்று பால்களாக சொற்கள்

அமையும். ஆணினைக் குறிக்கும் சொல் ஆண்பால் எனவும், பெண்ணினைக் குறிக்கும் சொல் பெண்பால் எனவும், ஆண், பெண் எனப் பலரைக் குறிக்கும் சொல் பலர்பால் எனவும் வழங்கப்பெறும். இவ்வாறு இம்முப்பாலையும் குறிப்பதனையே உயர்திணைச் சொற்கள் என்பர். இதனைத் தொல்காப்பியம்,

"ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்

பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி

யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே" (தொல். சொல். 2, 2019, ப.14) இவ்வாறு கூறுகிறது.

**கன்னடத்தில் உயர்திணை:**

உயர்திணை என்பது ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பால்களையும் குறிப்பது உயர்திணையாகும். கன்னடத்தில் ஆணைக் குறிக்கும் சொல், பெண்ணைக் குறிக்கும் சொல், பலரைக் குறிக்கும் சொல் என மூன்று பால்களாக சொற்கள் அமையும்.

"மக்கள், தேவர், நரகர் ஆகியவற்றைக் குறிக்கும் – சுருங்கக் கூறின் – அறிவும், ஒழுக்கமும் பெற்ற அனைத்துப் பொருள்களையும் குறிக்கும் எல்லாப் பெயர்களும் உயர்திணைப் பெயர்களாம். திராவிட மொழிகள் எல்லாவற்றிலும், உயர்திணைப் பெயர்கள் ஒருமைக்கண் வந்துழியே ஆண், பெண் எனப் பிரித்துணரப்படும். பன்மைக்கண், ஆண், பெண் வேற்றுமையின்றி, ஆனால், அஃறிணையினின்றும் வேறுபடுத்துக் காணும் வகையில், ஆண், பெண் பொதுப்பாலாகிய பலர்பாலெனப் பிரித்து அறியப்பெறும்" (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்., டிசம்பர் '59., ப.242) எனத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் மொழிபெயர்ப்பு நூலில் கா. கோவிந்தன், தா. சிங்காரவேலு இவ்வாறு கூறுகின்றனர்.

**தமிழில் அஃறிணை:**

மனிதரல்லாதப் பிற உயிருள்ள, உயிரற்றப் பொருள் அனைத்தையும் சுட்டும் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வஃறிணைப் பெயர்களை, ஒன்று மற்றும் பல எனப் பிரிப்பர். ஒன்றனை மட்டும் குறிக்கும் அஃறிணைப் பெயரினை ஒன்றன்பால் எனவும், ஒன்றிற்கு மேற்பட்டவற்றைக் குறிக்கும் அஃறிணைப் பெயர்களை பலவின்பால் எனவும், அஃறிணைப் பெயர்களில் ஒன்றன்பால், பலவின்பால் என்ற இவ்விரண்டு கூற்றுச் சொல்லும் பால்களாக அமையும். இவ்வாறு உயிருடைய அல்லது உயிரற்ற ஒன்று மற்றும் அதற்கு மேலுள்ளவற்றைக் குறிப்பன பன்மையைக் குறிக்குமெனை, இவ்விரு பாலைக் குறிப்பதனையே அஃறிணைச் சொற்கள் என்பர். இதனைத் தொல்காப்பியம்,

"ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்

றாயிரு பாற்சொ லஃறிணை யவ்வே" (தொல். சொல். 3, 2019, ப.16) இவ்வாறு கூறுகிறது.

(எ.டு) மாடு வந்தது – அஃறிணை ஒருமை / ஒன்றன்பால், மாடுகள் வந்தன – அஃறிணைப் பன்மை / பலவின் பால்

**கன்னடத்தில் அஃறிணை:**

அஃறிணை என்பது, கன்னடத்தில் உயிருள்ளவை. ஆனால், பகுத்தறியும் ஆற்றல் அற்றவைகளை அஃறிணை என்கின்றனர்.

“உயர்திணைப் பெயர்களல்லாத, பகுத்துணர் அறிவற்ற எல்லாப் பெயர்களும், அவை, உயிர் பெற்றனவாயினும், அற்றனவாயினும், அஃறிணைப் பெயர்களாகவே மதிக்கப்பெறும்” (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்., டிசம்பர் ’59., ப.242) எனத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் மொழிபெயர்ப்பு நூலில் கா. கோவிந்தன், தா. சிங்காரவேலு இவ்வாறு கூறுகின்றனர்.

(எ.டு) Hasu bantu, Hasukalu bantavu

இவைகள் கன்னடத்தில் அஃறிணை ஒருமை மற்றும் அஃறிணைப் பன்மையக் குறிக்கும் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**தமிழில் திணை மயங்கி வருதல்:**

உயர்திணையில் பெண்மைத் தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்லின் ஈற்றெழுத்து தமக்குடையதாக அல்லாமலும், தெய்வத்தைக் குறிக்கும் சொல்லும் பெயர்ச்சொல்லின் ஈற்றெழுத்தும் உயர்திணையிலிருந்து வேறுபட்டு அதற்குரிய பாலாயமைந்து வரும். இதனைத் தொல்காப்பியம்,

“பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியுந்
தெய்வஞ் சுட்டிய பெயர் நிலைக் கிளவியு
மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்” (தொல்., சொல்., 4, 2019, ப.16) இவ்வாறு கூறுகிறது.

(எ.டு.) பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார்.

**கன்னடத்தில் திணை மயங்கி வருதல்:**

கன்னடத்தில், ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் இடையில் நபும்சகலிங்கம் எனக் குறிக்கின்றார் இந்நூலாசிரியர். இவ்வாறு ஆண்பாலிற்கும் – பெண்பாலிற்கும் விரவிவரும் திணையை விரவுத்திணை என்பர். இவ்விரவுத்திணையை நபும்சகலிங்கம் என்கிறனர்.

“Sarvanaammo lingaat ko va” (கர்., 66, 2020, ப.25) என்னும் இந்நூற்பாவிற்கு எல்லா உயிர்களும் லிங்கம் என்னும் சொல்லினால் குறிக்கப்படும் என்பது பொருளாகும். இந்நூற்பாவிற்கு “Alingaat sarvanaamnah paraayaas chathurthi vibhakteh paaravah kakaaro bahavathi va” (கர்., 66, 2020, ப.25) என்று விருத்தியுரையில் குறிப்பிடுவதன் மூலம் கன்னடத்தில் விரவுத்திணை உள்ளது என்றும் இவ்விரவுத்திணையானது நான்காம் வேற்றுமையில் பயன்பட்டு வரும் பொழுது ‘கே’ என்னும் எலுத்தை ஈற்றில் கொண்டு முடிவடையும் என இதனைக் கர்நாடக பாஷாபூஷணா கூறுகிறது.

Adakke, Adake, Idakke, Idake என இவ்வாறு விரவுத்திணையானது நான்காம் வேற்றுமையில் வரும் பொழுது இவ்வாறு வரும்.

**தமிழில் பால் ஈறுகள்:**

ஆணைக் குறிக்கும் சொல், பெண்ணைக் குறிக்கும் சொல், பலரைக் குறிக்கும் சொல் ஆகிய மூன்றும் உயர்திணையைக் குறிக்கவரும் பால்களாகும். இதில் ஆண், பெண், பலர் என மொழியில் வேறுபடுத்தி பொருள் புரிந்துகொள்வதற்கு அப்பாலின் இறுதியில் வரும் ஒற்றினைக் கொண்டு

புரிந்துகொள்ள முடியும். அவ்வாறு பாலினை வேறுபடுத்திக் கூறுவதற்குப் பயன்படும் ஈற்றெழுத்தானது பால் ஈறு எனப்படும். இவைகள் உயர்திணையைக் குறித்து நிற்பதால் உயர்திணைப் பால் ஈறுகள் எனப்படும்.

மனிதரல்லாதப் பிற உயிருள்ள, உயிரற்ற பொருள் அனைத்தையும் சுட்டும் பெயர்கள் அஃறிணை எனப் பிரிக்கப்பட்டுள்ளது. உயிருடைய அல்லது உயிரற்றப் பொருள்களை ஒன்று மற்றும் பல என்று பிரிப்பர். இதில் ஒன்று என்பதைக் குறித்து நிற்கும் பால் ஈறுகள் ஒன்றன் பால் ஈறுகள் எனவும், பலவற்றினைக் குறித்து நிற்கும் பால் ஈறுகள் பலவின்பால் ஈறுகள் எனப்படும். இவ்வாறு மனிதரல்லாத உயிருடைய அல்லது உயிரற்ற ஒன்று மற்றும் பலவற்றினைக் குறித்து நிற்கும் பால் ஈறுகள் அஃறிணைப் பால் ஈறுகள் எனப்படும்.

**ஆண்பால் ஈறுகள்:**

ஆண்பால் என்பது உயர்திணைப் பொருளில் ஆண்களைக் குறிப்பதற்குப் பயன் படுத்தப்படும் சொல்லாகும். இவ்வாறு ஆண்பாலினைக் குறிக்கும் ஈற்றெழுத்து ஆண்பால் ஈற்றெழுத்தாகும். இவ்வீறானதுத் தமிழில் னகர ஒற்றாகும். னகர ஒற்றானது ஆண்பால் ஒருமையக் குறிக்கும். இதனைத் தொல்காப்பியம்,

“னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்” (தொல்., சொல்., 5, 2019, ப.18) என இவ்வாறு கூறுகிறது. “ஆடூஉவறிசொல்லாவது னகரவீற்றுச் சொல்லாயினும், பாலுணர்த்துதற் சிறப்பு நோக்கி ‘னஃகானொற்றே’ என்றார்” (தொல்., சொல்., 5, 2019, ப.18) என்று தொல்காப்பியர் கூறுவதாக சேனாவரையர் இத்தொல்காப்பிய உரையில் பொருள் கூறுகிறார்.

(எ.டு.) உண்டனன், உண்டான், உண்ணா நின்றனன், உண்ணா நின்றான், உண்பன், உண்பான், கரியன், கரியான்.

மேற்கூறிய எடுத்துக்காட்டில் கூறுவதுபோல, னஃகான் ஒற்றானது ஆண்பாலை உணர்த்தவரும் பால் ஈறு ஆகும்.

**பெண்பால் ஈறுகள்:**

பெண்பால் என்பது உயர்திணைப் பொருளில் பெண்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இவ்வாறு பெண்பாலினைக் குறிக்கும் ஈற்றெழுத்து பெண்பால் ஈற்றெழுத்தாகும். இவ்வீறானதுத் தமிழில் ளகர ஒற்றாகும். ளகர ஒற்றானது பெண்பால் ஒருமையைக் குறிக்கும். இதனைத் தொல்காப்பியம்,

“ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்” (தொல்., சொல்., 6, 2019, ப.18) என்கிறார்.

“ஆடூஉவறி சொல்லாவது னஃகானொற்றென்பது கருத்தாகக் கொள்க. ‘ளஃகானொற்று’ முதலாயினவற்றிற்கும் இவையொக்கும்” (தொல்., சொல்., 2019, ப.18) என்று சேனாவரையர் கூறியதன்படி, மகடூஉவறிசொல்லிற்கு ளகர ஈற்றுச் சொல்லாயினும், பாலுணர்த்தும் சிறப்பு நோக்கி ளஃகான் ஒற்றே என்று கொள்ளவேண்டும்.

(எ.டு.) உண்டனள், உண்டாள், உண்ணா நின்றனள், உண்ணா நின்றாள், உண்பள், உண்பாள், கரியள், கரியாள்.

மேற்கூறிய எடுத்துக்காட்டில் கூறுவதுபோல, ளஃகான் ஒற்றானது பெண்பாலை உணர்த்தவரும் பால் ஈறு ஆகும்.

**பலர்பால் ஈறுகள்:**

உயர்திணையில் பலரினைக் குறிப்பதற்கு வரும் சொல்லானது பலர்பால் சொல்லாகும். பலர்பால் என்பது உயர்திணைப் பொருளில் ஆண்பால், பெண்பால் மற்றும் இருபாலிலுள்ளப் பலரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இவ்வாறு பலர்பாலினைக் குறிக்கும் ஈற்றெழுத்து பலர்பால் ஈற்றெழுத்தாகும். அப் பலர்பால் ஈறானதுத் தமிழில் ரகர ஒற்று, பகர இறுதி, மார் என்பவைகள் பலர்பாலைக் குறிக்கவரும் சொற்களாகும். இதனைத் தொல்காப்பியம்,

"ரஃகா னொற்றும் பகர விறுதியு
மாரைக் கிளவி யுளப்பட மூன்று
நேரத் தோன்றும் பலரறி சொல்லே" (தொல்., சொல்., 7, 2019, ப.19) இவ்வாறு கூறுகிறது.

(எ.டு.)

- உண்டனர், உண்டார்
- உண்பார், கரியர் (ஈற்றில் ரகர ஒற்றுக் கொண்டு வருபவை)
- கூறுப, வருப எனவும் (ஈற்றில் பகர ஒற்றுக் கொண்டு வருபவை)
- கொண்மார், சென்மார் (ஈற்றில் மார் ஒற்றுக் கொண்டு வருபவை) எனவும் வரும்.

**கன்னடத்தில் பால் ஈறுகள்:**

ஆணைக் குறிக்கும் சொல், பெண்ணைக் குறிக்கும் சொல், பலரைக் குறிக்கும் சொல் ஆகிய மூன்றும் உயர்திணையைக் குறிக்கவரும் பால்களாகும். இதில் ஆண், பெண், பலர் என மொழியில் வேறுபடுத்தி பொருள் புரிந்துகொள்வதற்கு அப்பாலின் இறுதியில் வரும் ஒற்றினைக் கொண்டு புரிந்துகொள்ள முடியும். அவ்வாறு பாலினை வேறுபடுத்திக் கூறுவதற்கு பயன்படும் ஈற்றெழுத்தானது பால் ஈறு எனப்படும். தமிழ் மொழியினைப் போன்றே கன்னட மொழியிலும் பால் ஈறுகள் உள்ளன.

கன்னடத்தில், னகர ஒற்று ஆண்பால் ஒருமையைக் குறிக்கும் எனவும், ளகர ஒற்று பெண்பால் ஒருமையைக் குறிக்கும் எனவும், ர், அர், திர், அல்லது விர் என்ற சொற்கள் ஆண்பால் மற்றும் பெண்பாலை பன்மையில் குறிக்கும் சொற்கள் ஆகும். இவை சில சமயங்களில் 'கள்' என்னும் பன்மை சொல்லைக் கொண்டும் முடியும்.

இதனை இரண்டாம் நாகவர்மா,

"Stri-purusha-vichisho ir – ar – dir – vir kvachit" (கர்., 43, 2020, ப.18) என்கிறார்.

(எ.டு.) Pendir, Sallar, Tammandir, Tayindir, Ayyandir, Tandevir

Magal, Appangal, Aiyangal. – ஆண்பால், பெண்பாலைக் குறிக்கப் பயன்படுத்தும் பால் ஈறுகள் இவைகளாகும்.

"Val – ke – cha striyaam" (கர்., 103, 2020 ப.38) என்கிறார்.

(எ.டு.) Aval, Ival, Uval, Avalam, Ivalam, Uvalam. – பெண்பால் ஈறுகள்

(எ.டு.) Avanu, Ivanu, Bandhanu – ஆண்பால் ஈறுகள்

**தமிழில் ஒன்றன் பால், பலவின் பால் ஈறுகள்:**

மனிதரல்லாதப் பிற உயிருள்ள, உயிரற்றப் பொருள் அனைத்தையும் சுட்டும் பெயர்கள் அஃறிணை எனப் பிரிக்கப்பட்டுள்ளது. உயிருடைய அல்லது உயிரற்றப் பொருள்களை ஒன்று மற்றும் பல என்று பிரிப்பர். இதில் ஒன்று என்பதைக் குறித்து நிற்கும் பால் ஈறுகள் ஒன்றன் பால் ஈறுகள் எனவும், பலவற்றினைக் குறித்து நிற்கும் பால் ஈறுகள் பலவின்பால் ஈறுகள் எனப்படும்.

ஒன்றன்பால் என்பது அஃறிணைப் பொருளில் ஒன்றினை அதாவது ஒருமையைக் குறிப்பதற்குப் பயன் படுத்தப்படும் சொல்லாகும். இவ்வாறு ஒன்றன்பாலினைக் குறிக்கும் ஈற்றெழுத்து ஒன்றன்பால் ஈற்றெழுத்தாகும். இவ்வொன்றன்பால் ஈறானதுத் தமிழில் அஃறிணை ஒன்றன் பாலைக் குறிக்க த, ற, ட மேலேறி வரும் குற்றியலுகரங்கள் து, று, டு வரும். இதனைத் தொல்காப்பியம்,

"ஒன்றறி கிளவி த ற ட வூர்ந்த

குன்றிய லுகரத் திறுதி யாகும்". (தொல்., சொல்., 8, 2019, ப.20)

(எ.டு)

- வந்தது, வாராநின்றது, வருவது, கரிது
- கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று
- குண்டுகட்டு, குறுந்தாட்டு

என து, று, டு ஆகிய எழுத்துக்களை ஈற்றில் கொண்டு ஒன்றன்பால் ஈறுகள் வரும்.

பலவின்பால் என்பது அஃறிணைப் பொருளில் பலவற்றினை அதாவது பன்மையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இவ்வாறு பலவின்பாலினைக் குறிக்கும் ஈற்றெழுத்து பலவின்பால் ஈற்றெழுத்தாகும். இப்பலவின்பால் ஈறானதுத் தமிழில் ஒன்றிற்கு அதிகமானவற்றைக் குறிப்பதற்கு அஃறிணைப் பலவின்பால் வரும். அப்பலவின்பால் ஈறுகளானது அ, ஆ, வ என்ற மூன்று எழுத்துக்களையும் ஈற்றில் கொண்டு வரும். இதனைத் தொல்காப்பியம்,

"அ ஆ வ என வரூஉ மிறுதி

யப்பான் மூன்றே பலவறி சொல்லே". (தொல்., சொல்., 9, 2019, ப.20) என்கிறார்.

(எ.டு.)

- உண்டன, உண்ணாநின்றன, உண்பன, கரியன எனவும்
- உண்ணா, திண்ணா எனவும்
- உண்குவ, திண்குவ எனவும்

அகரம், ஆகாரம், வகரம் இம்மூன்று எழுத்துக்களையும் ஈற்றில் கொண்டு வருபவைகள் பலர்பாலை உணர்த்தும் எழுத்துக்கள் ஆகும்.

உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளிலும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற ஐந்து பால்களைக் குறிக்க ன, ள, ர, ப, மார், து, று, டு, ஆ, வ ஆகிய

KALANJIYAM

பதினொரு எழுத்துக்களும் வினைச் சொற்களோடு வரும் என்கிறார் தொல்காப்பியர். இதனைத் தொல்காப்பியம்,

"இருதிணை மருங்கி னைம்பா லறிய

வீற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந்

தோற்றந் தாமே வினையொடு வருமே" (தொல்., சொல்., 10, 2019, ப.22) இவ்வாறு கூறுகிறது.

**கன்னடத்தில் ஒன்றன்பால், பலவின்பால் ஈறுகள்:**

கன்னடத்தில், அஃறிணை ஒருமையைக் குறிக்க அது, இது, உது என்பவைகள் வருகின்றன.

(எ.டு.) Adu, Idu, Udu

அஃறிணைப் பன்மையைக் குறிக்க அவு என்ற சொல் பயன்படுகிறது. இதனை, இரண்டாம் நாகவர்மா,

"Sarvanaama-gunavachanaanaam avu tad ante" (கர்., 42, 2020, ப.17)

(எ.டு.) Ellavu, Ellavam, Ellavarim, Ellavargge, Ellavarattanim, Ellavara, ellavarol

என்கிறார்.

**ஒப்பீட்டு நோக்கில்: தமிழ் – கன்னட மொழிகளில் திணை – பால்:**

இங்கு தமிழ் மற்றும் கன்னடம் ஆகிய இருமொழிகளின் முதல் இலக்கண நூல் என்பதன் அடிப்படையில், தமிழில் தொல்காப்பியத்தையும், கன்னடத்தில் – கர்நாடக பாஷாபூஷணா என்னும் நூலையும் ஒப்பிட்டதன்வழி,

தமிழ் – கன்னடம் ஆகிய இரு மொழிகளில் உள்ள திணை மற்றும் பால் ஆகியவற்றை ஒப்பிட்டு நோக்கியதன்வழி, இருமொழியிலும் திணையானது இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை உயர்திணை எனவும், அஃறிணை எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. இவ் உயர்திணை என்பது ஆண்பால், பெண்பால், பலர்பால் எனத் தமிழிலும், கன்னட மொழியில் ஆண்பால், பெண்பால் என இரண்டு பிரிவுகளையும் கொண்டுள்ளது. கன்னட மொழியில் பலர்பால் என்னும் அமைப்பானது இல்லை. இருமொழியிலும், அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இருமொழியிலும் திணை மயங்கி வருதல் என்கிற விதி உள்ளது. தமிழில் பால் திரிந்து வருவதைத் திணை மயக்கம் என்கிறோம். கன்னடத்திலும் இரு உயர்திணைகளுக்கிடையில் ஏற்படும் மயக்கத்தை நபும்சகலிங்கம் என்றழைக்கின்றனர். இதனைத் திணை மயக்கம் என்கின்றனர்.

இருமொழியிலும் உயர்திணை ஆண்பால் விகுதிகள் 'அன்' என்றும், இருமொழியிலும் பெண்பால் விகுதிகள் 'அள்' என்றும்,

தமிழில், பலர்பால் விகுதிகள் ரகர ஒற்று, பகர இறுதி, மார் என்ற சொல் இம்மூன்றும் பலர்பாலைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.

கன்னடத்தில், ர், அர், திர், அல்லது விர் என்பது ஆண்பால் மற்றும் பெண்பாலைக் குறிக்கும் பால் ஈறுகள் இவைகளாகும். கன்னடத்தில் பலர்பால் என்னும் அமைப்பு இல்லை.

இருமொழியிலும் அஃறிணை ஒருமையைக் குறிக்க அது, இது எனும் சொற்களும்,

அஃறிணைப் பன்மையைக் குறிக்கத் தமிழில் ‘கள்’ என்னும் விகுதியும், கன்னடத்தில் ‘அ’ மற்றும் ‘அவு’ என்னும் சொற்கள் விகுதிகளாக வந்துள்ளன.

தமிழ் மற்றும் கன்னட மொழிகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் என்பதால் இவற்றில் இரு மொழிகளுக்கிடையில் திணை மற்றும் பால் என்பதில் எவ்வித விலகலும் இன்றி ஒன்றுபட்டே அமைந்துள்ளன என்பதுத் தெளிவாகிறது.

தமிழில் உள்ளத் தொல்காப்பியம் மற்றும் கன்னடத்திலுள்ள கர்நாடக பாஷாபூஷணா என்னும் இவ்விரு நூல்களும் காலத்தால் வேறுபட்டவை எனினும் தமிழிலுள்ளத் திணை மற்றும் பால் ஆகியவைகள் தமிழ் மொழியின் அமைப்பினை ஒத்தே காணப்படுகிறது. கர்நாடக பாஷாபூஷணா நூல் சமஸ்கிருத மொழியின் தாக்கம் நிறைந்தக் காலத்தில் எழுதப்பட்டிருந்தாலும், சமஸ்கிருத மொழியின் எழுத்து அமைப்புகளைப் பெற்றிருந்தாலும் தமிழின் மொழி அமைப்பினையே கன்னட மொழி பெற்றுள்ளது என்பது இவ்விரு நூல்களின் திணை – பால் அமைப்பினை ஒப்பிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**முடிவுரை:**

தமிழ் மற்றும் கன்னடம் ஆகிய இருமொழிகளில் உள்ள முதல் இலக்கண நூல்களானத் தமிழில் உள்ளத் தொல்காப்பியத்தையும், கன்னடத்தில் உள்ளக் கர்நாடக பாஷாபூஷணம் ஆகிய இரு நூல்களையும் மையமாகக் கொண்டு இருமொழியிலும் இருதிணை – ஐம்பால் ஆகியவற்றை ஆராய்ந்ததன்வழி, இருமொழிகளின் திணை மற்றும் பால்கள் ஒத்தத் தன்மையில் உள்ளன. தமிழ் மொழியின் மொழிக்கூறு அமைப்பும், வாக்கிய அமைப்பையும் ஒத்த நிலையில் கன்னட மொழி உள்ளது என்பது இக்கட்டுரையின் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது. கன்னட மொழிக்கான எழுத்து அமைப்பு முறைகள் சமஸ்கிருத மொழியினைத் தழுவிய நிலையில் இருந்தாலும், தமிழ் மொழியின் மொழிக்கூறு அமைப்பினை கன்னட மொழிப் பெற்றுள்ளது. இரு மொழிகளும் வேறுவேறு மரபாக இருந்தாலும் இருமொழிகளும் ஒத்தத் தன்மையில் இருப்பதற்குக் காரணம் இருமொழிகளும் ஒரே மொழிக்குடும்ப மொழிகளாகும்.

**துணை நூற்பட்டியல்:**


1. Lewis Rice., Nagavarma’s Karnataka Bhasha-bhushana, Gyan Publishing House, New Delhi, 2020
2. இளவரசு.சோம., நன்னூல்., மணிவாசகர் பதிப்பகம்., சென்னை, 2014
3. சேனாவரையர் உரை., தொல்காப்பியம் சொல்லதிகாரம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2019
4. மணியன்.தங்க., திராவிட மொழிகளின் ஒப்பீட்டாய்வு, கவிதா ஆர்ட் பிரிண்டர்ஸ், கீழ்ப்பாக்கம், சென்னை, 2004
5. ஜான் சாமுவேல்., திராவிட மொழிகளின் ஒப்பாய்வு, ஆசியவியல் நிறுவனம், சென்னை.


இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.